தொகுதி-௫௬ Vol. 56

பகுதி-௯ No. 9

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1991

சார்வரி — மார்கழி

DECEMBER-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. இளம்பூரணர் எழுத்துரை
ஆ. சிவலிங்கனர், மயிலம். 251

2. தொல்காப்பியர் பொருட்படலம்
—இளசைகிழார் புதிய உரை
புலவர். க. வெள்ளைவாரணனர், 259
அண்ணாமலை நகர்

3. நப்போல் வளை
மா. இளையபெருமாள், எம். ஏ. எம். லிட். 268

4. வள்ளுவர் சொற்படி வாழ்
மாணவர் பகுதி 272

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L C.

2. திரு. சித்தாந்தகலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனர் M. A. L. T. M. O. L. Ph. D
சென்னை.

4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர்,
தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருசு Vol. 56	திருவள்ளுவர் ஆண்டு 1991 சார்வரி– மார்கழி 1960 — December	பகுதி. கூ No. 9

248-ஆம் பக்கத்தொடர்ச்சி

இளம்பூரணர் எழுத்துரை

(ஆ. சிவலிங்கனார், மயிலம்)

இந்நூற்பாவில் வல்லெழுத்து மிகும் என்றது ஈற்றுவல்லெழுத்தையன்று, சாரியை வல்லெழுத்தை எனக்கொள்ள வேண்டுவதேன் என்றால், திரிந்துமுடியும் னகரமும் ணகரமும் லகரமும் ளகரமும் என இவற்றை நோக்கிக் கொள்ள வேண்டும். மொழிக்கிறுதியில் வரும் மெய்கள் ஞணநமன யரலவழள என்பனவாம். இவற்றுள் வருமொழிவல்லெழுத்து மிகுவதாயின் யரழ என்பனவற்றின் முன்னர் அவை நிற்க மிகும். மகர வீற்றின் முன்னர் அம்மகரம் கெட மிகும். ஞநவ(தெவ்) முன்னர் அவை உகரத்தொடு சேர்ந்த பின்னர்மிகும். சுட்டுமுதல் வகரம் வற்றுச்சாரியை பெறாமல் வருதல் இல்லையாதலின் வல்லெழுத்தானது ஈறுநோக்கி மிகுதல் இல்லை, எனவே அவ்வழிவரும் வல்லெழுத்து சாரியை வல்லெழுத்தாம். னகர, ணகர லகர ளகரங்களின் முன்னர் அவைகளே றகர டகரங்களாகத் திரிதலின் (வல்லெழுத்துக்களாகவே திரிதலின்) மிகுதல்

இல்லை. அதனால் 'கலத்துக்குறை' என்பதில் 'கலன்' என்ற நிலைமொழி னகரவீறாக இருத்தலின் வருமொழி வல்லெழுத்து ஈறுநோக்கி மிகுதற்கில்லை. அதனால் இடைக்கண் வந்த சாரியை நோக்கியே மிகுவதாயிற்று. திரிதலுடைய அந்நான்கெழுத்துக்களையும் நோக்கியே இந்நூற்பாவில் சாரியை வல்லெழுத்தை விதித்தார். மற்றை எழுத்துக்களை நோக்கி அவ்வவ் வீறுகளில் ஈற்றுவல்லெழுத்து விதித்தார்.

கலத்துக்குறை என்பதைக் கலன்+ குறை எனப் பிரித்து நிலைமொழி னகர வீறாகக் கொள்ள வேண்டும். அல்லது கலம்+ குறை எனப்பிரித்து மகர வீறாகக் கொள்ளின் இந்நூற்பாவின் விதியாவது, "மகரவிறுதி வேற்றுமையாயின், துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே', என்ற நூற்பாவின் விதியாவது பெறும் எனக் கொள்ள வேண்டும். ஆனால் அத்துச்சாரியை யின்றிக் 'கலக்குறை' என வருமாயின், நிலைமொழி கலம் எனமகரவீறாகவே கொள்ளவேண்டும். கொண்டு "மகரவிறுதி" என்னும் நூற்பா விதிப்படி வல்லெழுத்து மிகுதியை ஈற்று வல்லெழுத்து மிகுதி எனக்கொள்ள வேணடும். கலன்+ குறை எனப்பிரித்தால் கலற்குறை என்றுதான் ஆகவேண்டும். னகரக்கேடு இல்லை. ஆதலின் னகர வீறாகப் பிரித்தல் கூடாது.

3\. புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யோடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே (129)

"புள்ளி யீற்று முன்னும் என தொகுத்து நின்ற
உம்மையை விரித்ததனானே குற்றியலுகரத்தின் முன்னும்
இவ்விதி கொள்க. நாகரிது எனவரும்"

இத்தொடரில் 'விரித்ததனானே' என்பதை "விரித்து அதனானே" எனப் பிரித்துக் கொள்க. குற்றியலுகரம் உயிர்

ஏற இடம் கொடுக்கும் என்பதை "குற்றியலுகரமும் அற்றென மொழிப" என்னும் நூற்பாவிலேயே கூறிவிட்டமையின் ஈண்டும் ஏன் கூறினர் உரையாசிரியர் என்னும் ஐயம் எழலாம். ஆண்டு நிலைமொழியீற்றுச் செயலாகக் கூறப்பட்டது. ஈண்டு வருமொழிமுதல் எழுத்தின் செயலாகக் கூறப்பட்டது என அமைதி கொள்ள வேண்டும்.

3. வல்லெழுத்து மிகினும் மான மில்லை **(231)**

"நிலாவிற் கோண்டான் என்பதற்கு நிலாத்துக் கோண்டான் என்பது ஈற்றுப் பொதுமுடிபாயினவாறு அறிக"

'நிலா' என்பது 'கொண்டான்' என்பதோடு புணரும் போது வேற்றுமை வழியில் அத்துச்சாரியை வரும் என்பது. "நிலாவென் கிளவி அத்தொடு சிவணும்" (229) என்பதாற் பெறப்பட்டது. உதாரணம் 'நிலாத்துக் கொண்டான்' என்பது. அத்துச்சாரியை அடுத்து வருமொழி வல்லெழுத்து மிக்கது. இவ்வல்லெழுத்து அத்துச்சாரியை பற்றி வந்த வல்லெழுத்தாகுமோ என்ற ஐயம் வரலாம்.

"அத்தே வற்றே" (134) என்ற நூற்பாவில் நிலைமொழி மெய்யீருயின் அத்து இடைவரும்போது அவ்வீற்றுமெய் கெட வருமொழிவல்லெழுத்து மிக்கு முடியும் என்பது கூறப்பட்டது. அவ்வல்லெழுத்து சாரியைநோக்கி வந்ததாம். 'நிலாத்துக்கொண்டான்' என்பதில் உள்ள வல்லெழுத்து ஈறுபற்றி வந்தது. ஆகாரவீற்று முன்னர் வருமொழி வல்லெழுத்து வேற்றுமைவழியில் மிக்கு முடியும் என்பது பொதுவிதி. அதற்கேற்ப 'நிலா' என்ற ஆகாரவீற்று முன்னர்க் கொண்டான் என்பதில் உள்ள முதல் வல்லெழுத்துமிக்கு நிலாக் கொண்டான் என முடிதல் வேண்டும். இடையில் அத்து வரவே நிலாத்துக்கொண்டான் என முடிந்தது. ஆதலின் வல்லெழுத்து ஈற்றுப்பொதுமுடிபால் வந்தது எனக் கொள்ள வேண்டும், அன்றியும் 'உருபிற்குச்

சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபுவல் லெழுத்து வீழ்க்க வேண்டும்' என்பதற்கேற்பவும் வல்லெ ழுத்து ஈற்றுப்பொதுமுடிபால் வந்ததென்ன வேண்டும். 'நிலாவிற்கொண்டான்' என்புழி இன்சாரியை வந்தமையின் ஆகாரவீற்றுப் பொதுவிதியாற் பெறும் வல்லெழுத்தை வீழ்க்க வேண்டும். எனவே 'நிலாவிற்கொண்டான்' என்பதை நோக்கும் போது 'நிலாத்துக் கொண்டான்' என்பதில் உள்ள வல்லெழுத்து மிகுதியானது சாரியை நோக்கி வந்த தின்றி ஈற்றுப்பொதுமுடிபால் வந்ததென்க.

5. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை (264)

'ஒற்றிடைமிகா என்றதனுல் சாரியைவகுப்ப வல்லெழுத்து வீழாது என்பது பெற்றும்"

உகரவீற்றுப் பெயர்களின் முன்னர் வருமொழி வல்லெழுத் தானது வேற்றுமைப் புணர்ச்சியில் மிக்குமுடியும் என்பது பொதுவிதி. உதாரணம் 'கடுக்காய்' என்பது. இந்நூற்பா வில் சுட்டு முதல் இறுதி (உகரம்)யானது உருபுடன் சேரும் போது பெறும் அன்சாரியை பெற்று முடியும். அது + கோடு = அதன்கோடு எனக்காண்க. அவ்வாறு அன்சாரியை பெறும் போது வருமொழி வல்லெழுத்து மிகுதல் இல்லை. வல்லெழுத்து சாரியை வகுத்ததால் மிகவில்லை என்று கூறுவர் சிலர். அதனுல்அவர்கள், "சாரியை வகுப்பப் பொதுவிதிப்படிப்பெறும் வல்லெழுத்து வீழும்" என ஒரு கொள்கையைக் கூறுவர். இக்கொள்கையை ஆசிரியர் தொல்காப்பியர் உடன்படுவாரல்லர். அதனுல் அவர் "சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும் என்ற அளவில் நில்லாது "ஒற்றிடை மிகாஅ வல்லெழுத்தியற்கை" என வல்லெழுத்து மிகாது என்பதையும் சொல்லிவைத்தார். ஆசிரியரின் கருத்துப்படியே உரையாசிரியரும் அவ்வாறு எழுதினர்.

உருபியல் நிலையும் மொழியுமா ருளவே
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும் (295)

என்ற நூற்பாவின்கீழ்,

''இதனுனும் பெற்றும் சாரியைப்பேறு வருமொழி
வல்லெழுத்து விலக்காமை''

என எழுதியதற்கும் இப்படியே விளக்கம் காண்க.

6. தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா (274)

''மேற்கூறியற்கை வல்லெழுத்துமிகா என்றதனுல் வந்தது
கண்டு வாராதது உணர்க என்னும் தந்திரவுத்தி வகையான்
வல்லெழுத்து மிகும் என்பது கூறப்பட்டதாயிற்று.''

ஆசிரியர் எகர ஒகரங்களின் முன்னர் வருமொழி வல்லெழுத்து மிகும் என்று யாண்டும் கூறவில்லை. அப்படியிருக்க. 'மேற்கூறியற்கை வல்லெழுத்து மிகா' என ஈண்டுக் கூறியுள்ளமையால் கூறிய இவ்விடம் கண்டு கூருத விடத்தும் கூறியதாகவே உணர்தல் வேண்டும் என்பது உரையாசிரியரின் விளக்கம்.

''எஎக் கொற்று, ஓஒக் கொற்று; சத்தா, தேவா, பூதா
என இவை முன்னிலை வினை, இயற்கை யென்றதனுல்
அம்முன்னிலை வினைகளை அளபெடையாக நிறீஇக் கொள்க''

'எஎக் கொட்டில்' என்னுமிடத்தில் உள்ள எகரம் ''ஏயென் இறுதிக்கு எகரம் வருமே'' என்ற விதிப்படி வந்த எழுத்து. இது வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் குரியது. 'எஎக்கொற்று' என்பது அல்வழிப் புணர்ச்சியாதலின் அதில் உள்ள எகரத்தை அளபெடையாக நிறீஇக் கொள்க என்

ரூர். அல்வழிப் புணர்ச்சியில் எகரம் வருக எனவிதி கூறப் படவில்லை.

7 இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே (314)

'இல்லம்' என்ற மரப்பெயர் கோடு என்பதுடன் சேரும் போது வேற்றுமைப் புணர்ச்சியில் மகரம் கெட்டு வருமொழி வல்லெழுத்தின் இனவெழுத்துமிக்கு 'இல்லங்கோடு' என வரும். இதில் மகரம் கெட்டதற்கு. "மகரவிறுதி" (312) என்ற நூற்பாவின் விதிப்படிக் கெட்டது என்றுவது அல்லது அதில் உள்ள 'துவர' என்றஇலேசினுற் கெட்டது என்று வது அமைதிகாட்டலாம். அதற்குப் பதில் உரையாசிரியர்,

"இதன்கண் மகரக்கேடு முன்னர் எல்லாம் (315) என்பதனுற் கொள்க" என்று இந்நூற்பாவின் பின்வந்த நூற்பாவில் உள்ள 'எல்லாம்' என்றதனுற் கெட்டதாக அமைதிகாட்டினுர். ஏன்?

"மகரவிறுதி" என்ற நூற்பாவில் மகரம் கெட, வருமொழி வல்லெழுத்து மிகுதி கூறப்பட்டது. இந் நூற்பாவில் வருமொழி வல்லெழுத்தின் இனவெழுத்து மிகுதி கூறப்பட்டது. அதனுல், வல்லெழுத்தின் மிகுதி பற்றிய நூற்பாவின் விதியாலோ, அதில் வந்த 'துவர' என்ற இலேசினுலோ மகரம் கெட்டது என்னுமல் "அல்வழியெல் லாம் மெல்லெழுத்தாகும்" (315) என்பதில் உள்ள 'எல்லாம்'என்பதனுற் கெட்டது என்ருர். அஃது (315) அல் வழிக்கு என்றுலும் மெல்லெழுத்தாகும் என்ற ஒப்புமை காரணமாகக் கூறினுர்.

8. இலமேன் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலு முரித்தே செய்யு ளான (317)

'உம்மை மகரவீறு என்னும் சாதியொருமை பற்றிவந்த எதிர்மறை." நிலையலும் உரித்து என்புழி நிலையாமையும்

உரித்து என்னும் பொருள் பெறப்படுதலின் உம்மை எதிர் மறையாயிற்று. 'இலம்' என்ற சொல் 'படு' என்பதுடன் புணரும்போது மகரம் நிலைத்தே நிற்கும்; நிலையாமையில்லை. அப்படியிருக்க, ஆசிரியர் 'நிலையலும்' என எதிர் மறை உம்மை கொடுத்தது பொருந்தாது. அதற்கு அமைதி கூறவே மேற்கண்டவாறு உரையாசிரியர் கூறினர். அதிகாரப்பட்டவீறு மகரவீறு. நிலைமொழியீற்று மகரம் வருமொழிவல்லெழுத்தோடு வேற்றுமைவழியில் புணருமிடத்துத் தான் கெடுதல் வேண்டும் என்பது 'மகரவிறுதி' (311) என்னும் நூற்பாவால் பெறப்படும். இலம் என்பதும் மகரவீறு. இது, 'படு' என்ற சொல்லுடன் புணரும் போது (வேற்றுமை முடிபில்) கெடாது நிற்கும். இவ்விரண்டையும் கொண்டு பார்க்கும் போது, மகரவீறு வேற்றுமை முடிபில் கெடுதலும் கெடாமையும் ஆகிய இரண்டியல்பும் உடையது என்பது போதரும், அதனால் 'நிலையலும்' என்பது, மகரம் நிலையலும் நிலையாமையும் என்ற இரண்டையும் தரும். இலம் என்பதற்கு நிலையலும் பிறவற்றிற்கு நிலையாமையும் கொள்ள வேண்டும். இலம் என்ற சொல்லின் மகரத்துக்கு நிலைத்தல் கூறுமிடத்தில் உம்மையால் பிறவற்றிற்கு நிலையாமை கூறலாமோ எனின். சொற்களில் வேறு வேறு எனினும் இறுதி வகையில் மகரவீறு ஆதலின் சாதி ஒருமை பற்றிக்கூறினர்.மகரவீற்றுச் சொற்கள் அனைத்தையும் 'மகர வீறு' என ஒருமையில் கூறுவது சாதி (கூட்ட) ஒருமையில் கூறுவதாம்.

9. படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்
தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான. (321)

"இன்னும் அதனானே (ஆவயினான என்றதனானே) உருபீற்றுச் செய்கை யெல்லாம் கோள்க. 'தம காணம்' எனவரும்"

'தாம்' என்றசொல் நெடுமுதல் குறுகித் 'தம்' என்றாகிப் பின் அகர எழுத்துப் பெற்றுத் 'த' எனநின்று 'காணம்' என்ற சொல்லுடன் சேர்ந்து 'தமகாணம்' என வந்தது. கழகப்பதிப்பில் "தம காணம் — அகரவுரு பேற்றது" என எழுதியமை காணப்படுகின்றது. அது பொருந்தாது. 'அ' என்பது உருபாயின் அது உருபியலில் கூறப்படவேண்டும். புள்ளிமயங்கியலில் பொருட்புணர்ச்சியே கூறப்படுதலின் உருபுபுணர்ச்சி கூறுதல் பொருந்தாது. உருபீற்றுச் செய்கையென வுரையாசிரியர் கூறியது, 'உருபுபுணர்ச்சி பற்றிய ஈற்றுச் செய்கை' எனப் பொருள்படும். அகரம் உருபாயின் அது உருபுக்கும் தமது காணம் என உதாரணம் காட்டவேண்டும். அவ்வாறு காட்டாமையின் 'தமகாணம்' என்பதே ஒருமை பன்மைகளுக்குப் பொருத்தம். அதனால் அகரம் "ஆறன் உருபினும்" என்று தொடங்கும் நூற்பாவில் "ஈறுகு புள்ளி அகரமொடு நிலையும்" என்ற விதிப்படி வந்த எழுத்தேயாகும். எனவே 'தமகாணம்' என்பது ஆறும் வேற்றுமைத் தொகை; விரியன்று.

10 நம்மேன் ஒருபெயர் மேல்லெழுத்து மிகுமே (326)
"மகரம் துவரஎன்ற இலேசினாற் கெட்டது"

மகரம் "மகரவிறுதி வேற்றுமையாயின்" என்ற நூற்பாவின் படிக் கெட்டதாகக் கூறாது, துவர என்ற இலேசினாற் கெட்டதாகக் கூறியது, 'நும்' என்பது விரவுப் பெயராதல் நோக்கி யென்க. இவ்வாறு வருவன பிறவிடங்களும் உள. இடம் நோக்கி அமைதிகாண்க.

(தொடரும்)

தொல்காப்பியர் பொருட்படலம்—
இளசைகிழார் புதிய உரை

புலவர். க. வெள்ளைவாரணனார் தமிழாராய்ச்சி விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

மதுரைக்கணக்காயர், நாவலர், டாக்டர், ச.சோமசுந்தர பாரதியாரவர்கள் எனது பேராசிரியப் பெருந்தகையாவார். அவர்கள்பால் யான் தமிழ்மாணவனாகப்பயின்ற காலத்தில் அவர்கள் தொல்காப்பியத்திற் கண்ட அரும்பொருள் விளக்கங்கள் சிலவற்றைக் கேட்டு மகிழும் வாய்ப்பு ஏற்பட்டது. நமக்குக் கிடைத்துள்ள தமிழ்நூல்களுக்கெல்லாம் காலத்தாலும் பொருள்நலத்தாலும் மிகவும் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கண நூலேயாகும். இந்நூல் தான் தோன்றிய காலத்திற்குப் பன்னூறாண்டுகள் பிற்பட்டுத் தோன்றிய உரைகளுடன் இந்நாளிற் பயிலப் பெற்று வருகிறது. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற்குப் பன்னூறாண்டுகள் பிற்பட்டுத் தோன்றியவர்களாதலாலும், தொல்காப்பியர் காலத் தமிழர் சமுதாய அமைப்பு பிற்காலத்தில் அயலவர் கூட்டுறவாலும் அரசியல் சமய வேறுபாடுகளாலும் பெரிதும் மாறிய சூழ்நிலையில் தோன்றி வளர்ந்தவர்கள் இவ்வுரையாசிரியர்களாதலாலும் பண்டைத்தமிழர் வாழ்வியலை விளக்கும் தொல்காப்பியப் பொருளதிகாரப்பகுதிக்கு உரைகாணுமிடத்து இன்றியமையாத சில இடங்களில் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபடும் நிலையில் உரைவிளக்கங்கள் வரைய நேர்ந்தது. பிற்காலச் சூழ்நிலையால் ஏற்பட்ட இம் மாறுபாடுகளை விளக்கித் தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதிக்குத்

தொல்காப்பியர் நூற்பாவையே மூலமாகக் கொண்டு நேரிய உரை காணவேண்டும் என்னும் வேட்கை நாவலர் பாரதியாரவர்களுக்கு உண்டாயிற்று.

தொல்காப்பியர் காலத் தமிழரது வாழ்வியலை விளக்கும் முறையில் தொல்காப்பியத்தையும் அதன் இலக்கண வரம்பில் தோன்றிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களையும் ஒப்புநோக்கி ஆராய்ந்து தொல்காப்பியச் சூத்திரங்கள் சிலவற்றுக்குத்தாம் கண்ட புதிய உரைவிளக்கத்தினை அண்ணமலைப் பல்கலைக் கழகச் சஞ்சிகையில் முதன் முதல் வெளியிட்டார்கள். அவ்விளக்கங்களைக் கண்ட தமிழறிஞர் பலர் நாவலர் பாரதியாரவர்களது ஆராய்ச்சி நுட்பத்தினைப் பாராட்டியதுடன், தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதிக்குத் தொடர்ந்து புதிய வுரையினை எழுதி வெளியிடும்படி வற்புறுத்தினர்கள். அதன்பின் அகத்திணையியல் முழுவதுக்கும் நாவலரவர்கள் உரையெழுதி முடித்தார்கள். 1939-ஆம் ஆண்டு கோடை விடுமுறைக்காலத்தில் இராமேசுரத்தை யடுத்த மண்டபம் என்னும் ஊரில் இவர்கள் தங்கியிருந்தபொழுது புறத்திணையியல் முழுவதற்கும் இவர்கள் உரைசெல்லிவர யான் உடனிருந்து படியெடுத்து முடித்தேன். இதற்கு முன் எங்கள் ஆசிரியப் பெருந்தகையவர்கள் மெய்ப்பாட்டியலைத் தமிழ்ச்சிறப்பு வகுப்பு மாணவர்க்கும் புலவர் மாணவர்க்கும் ஒருசேரப் பாடஞ்சொல்லிய பொழுது புதியவுரைவிளக்கங்கள் சில வெளிவந்தன. அக்குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு இவர்களால் மெய்ப்பாட்டியலுரையும் எழுதப்பெற்று நிறைவேறியது.

தொல்காப்பியப் புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய இரண்டு இயல்களுக்கும் நாவலர் பாரதியாரவர்கள்

எழுதிய புதியவுரையினைக் கரந்தைத்தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் தமிழ்ப்பொழில் வாயிலாக அச்சுப்படிகளை ஒப்புநோக்கி வெளியிடும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. இவ்வாறு நாவலர் பாரதியார் அவர்கள் தொல்காப்பியத்திற் கண்டபுதிய உரை விளக்கங்கள் தமிழகத்தில் வெளிவரவே, அதனைப்படித்து மகிழ்ந்த அன்பர் சிலர் அவ்வுரைகளை நூலுருவாக வெளியிட்டுதவும்படி நாவலரவர்களை வேண்டிக் கொண்டார்கள். அவர்களும் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் என்னும் மூன்றியல்களுக்கும் தாம் இயற்றிய புதிய உரைப்பகுதியை மூன்று புத்தகமாகத் தனித்தனியே வெளியிட்டு அம்மூன்றையும் முறையே எட்டையபுரம் மன்னர் அவர்களுக்கும், அண்ணமலைப் பல்கலைக் கழகத்தினை நிறுவிய மாண்புமிக்க செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணமலைச்செட்டியார் அவர்களுக்கும், தமிழ் நலம் கண்டு போற்றும் நல்லறிவுசான்ற பெரும் புலவர் மாணவர் ஆகியோர்க்கும் உரிமை செய்து வெளியிட்டுள்ளார்கள்.

இளசைகிழாராகிய நாவலர் பாரதியாரவர்கள் இயற்றிய இப்புதியவுரை, கண்ணுடியினகத்தே எதிர்ப்பட்ட பொருள் இனிது விளங்குமாறுபோன்றுபடித்த அளவிலேயே நுணுகி ஆராயாமல் பொருள் இனிது விளங்க இயற்றப்படுவதே சூத்திரமாகும் என ஆசிரியர் தொல்காப்பியனார் சூத்திரத்தியல்பினை விளக்கிய முறையினைக் கருத்திற்கொண்டு ஆசிரியர் வாய்மொழியாகிய தொல்காப்பிய நூற்பாவையே அடியொற்றியமைந்ததாகும். இவ்வுரையினை ஆழ்ந்து கற்போர், ஆசிரியர் சொல்லக் கருதிய பொருள் இதுவென்பதனையும், அவர் இயற்றிய நூற்பாக்களுக்கு இளம்பூரணர் நச்சினார்க்கினியர், முதலிய உரையாசிரியர்கள் உரைகண்ட முறையினையும், அவ்வுரை

ரையாசிரியர் உரைகளுள் கொள்ளத்தக்கனவும் மறுக்கத் தக்கனவும் இவையெனத் தெளிதற்குரிய காரணங்களையும் நன்குணர்வர், இவ்வுரைப்பகுதியில் எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக்காண்போம்.

அகத்திணை பொழுகலாற்றுக் குரியரான அவ்வந்நில மக்களின் பெயர்ப்பாகுபாடு கூறுவது,

"பெயரும் வினையுமென் றாயிரு வகைய
திணைதோறு மரீஇய திணைநிலைப்பெயரே"
(தோல்—அகம்–**20**) என்ற சூத்திரமாகும்.

இதன்கண் 'திணைதொறு மரீஇய திணைநிலைப்பெயர்' என்ற தொடரைத் திணைதொறு மரீஇய பெயர், திணைநிலைப்பெயர் என இரண்டாகப் பகுத்து, திணைதொறு மரீஇய பெயராவது, நால்வகை நிலத்தும் மரீஇப்போந்த குலப் பெயர் எனவும், திணைநிலைப்பெயராவது உரிப்பொருளிலே நிற்றலையுடைய பெயரெனவும் அவ்விருவகைப்பெயரும் பெயர்ப்பெயரும் வினைப்பெயரும் என்று இவ்விரண்டு பகுதியவாம் எனவும் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். 'திணைதொறும்மரீஇய திணைநிலைப்பெயர்' எனமேற்காட்டிய தொடரில் திணைதொறும் மரீஇய பெயர் என்பதற்குக் குலப்பெயர் எனப்பொருள் கொள்ளுதற்குத் தொல்காப்பியர் காலத்தமிழர் சமுதாய அமைப்பில் இடமில்லையென உணர்ந்த பாரதியாரவர்கள், "திணைதொறுமரீஇய திணை நிலைப்பெயர்" என்பதற்கு "ஒவ்வோ ரொழுக்கத்தோடும் பொருந்திய முல்லைமுதலிய நிலங்களில் புலனெறி வழக்கில் அகத்திணைக்குரியராய்க் கூறப்படும் மக்கட் பெயர்கள்" எனப்பொருள் கொண்டு, அப்பெயர்கள் அவ்வந்நிலத்தா ணமையும் பெயர்ப்பெயரும், அந்நிலத்து மக்களின் தொழிலா ணமையும் வினைப்பெயரும் என்று அவ்விரண்டு கூறுபாட்டினையுடையவாகும் என உரை கூறியுள்ளார்கள்.

''நானிலங்களினும் உள்ள மக்கள், அகத்திணைக்குரியராய்ச் செய்யுளிற் கூறப்படுங்கால், முல்லை முதலிய அவ்வத் திணைநிலங்களுக்குரிய இயல் இயைபு உடைய பெயர் கொள்ளுதல் ஒன்று; அவ்வாறன்றித் தத்தம் தொழிற்கு இயைபுடைய பெயர்கொள்ளுதல் ஒன்று. இவ்விருமுறைகளே தமிழகத் தொல்லை மரபொடு அடைவுடைய வாகும். தொல்காப்பியர் காலத்தமிழுலகில் தமிழரிடைப்பிறப்பளவில் என்றும் உயர்வுதாழ்வுடைய சாதி வகுப்புக்கள் கிடையா. அதனால் அக்காலத் தமிழ் மக்கள் தத்தம் நிலத்துக்கேற்றுங்கு ஆயர், குறவர், உழவர், மறவர் என்றழைக்கப்பட்டார்கள். இனி, ஒரு நிலத்துள்ளார் அந்நிலத்திற்குரிய தொழில் மேற்கொள்ளாது பிறிது தொழில் கையாளுவராயின், அவரவர் செய்தொழில் வேற்றுமையால் தொழில் குறிக்கும் ஏற்புடை வினைப் பெயர்களாலும் அழைக்கப்படுவர், நுளைஞர், பரதவர் என்பன நெய்தனிலஞ்சுட்டிய மக்கட் பெயர். வலைஞர், உமணர் என்பன நிலஞ்சுட்டாது, வலைவீசிப் பிழைக்குந் தொழிலுடையாரையும் உப்பு உண்டாக்கி விற்குந் தொழிலுடையாரையும் சுட்டும் வினைப்பெயர்கள். தொழில் எது புரிந்தும் நெய்தல் நிலம் வதிபவரைப் பரதவர் அல்லது நுளையர் என வழங்கல் ஒருமுறை; அப்போது அப்பெயர் நெய்தல் நிலமக்கள் என்னும் பொருட்டாகும். இனி, எந்நிலத்துறையினும் வலைத்தொழில் புரிந்து வாழ்வார் என்பதைக் குறிக்குங்கால் வலையர் என்னும் வினைப்பெயரால் அத்தொழிலுடையாரைச் சுட்டுவது ஒருமுறை.'' எனப்பெயர்ப்பெயர், வினைப்பெயர் என்பன பற்றித்தெளிவாக நாவலர் பாரதியாரவர்கள் தரும் விளக்கம் இங்கு நோக்கத்தக்கதாகும்.

தமிழகத்தில் மக்களுக்கு வழங்கும் நிலப்பெயர்களாகிய நாடன், ஊரன், சேர்ப்பன் முதலாக நிலம் பற்றியமைந்த

பெயர்ப்பெயரும், வேடன், வலையன் முதலாகத் தொழில் பற்றியமைந்த வினைப்பெயரும் பிறப்புப்பற்றி ஒவ்வொரு தொகுதியினரைக்குறித்து வழங்கும் பிற்காலச்சாதிபற்றிய பெயர்கள் அல்ல என்பது பண்டைத் தொகைநூல்களாகிய சங்கச்செய்யுட்களாலும் திருவாசகம் முதலிய இடைக்கால நூல்களாலும் நன்கு தெளியப்படும்.

சேரமான் கோக்கோதை மார்பனைப் பாடிய பொய்கையார் என்னும் புலவர், அவ்வேந்தனைக் குறிஞ்சி நிலம் உடைமை பற்றி 'நாடன்' என்றும், மருதநிலம் உடைமை பற்றி 'ஊரன்' என்றும், நெய்தல் நிலம் உடைமை பற்றிச் 'சேர்ப்பன்' என்றும் நிலப்பெயராற் பாராட்டியுள்ளார்.

"நாட னென்கோ ஊரன் என்கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ
யாங்னம் மொழிகோ ஓங்குவாட் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பின் அயலது
இறங்குகதிர் அலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ஒருங் கெழுமே"
(புறநானூறு—49)

என்பது அப்புலவர் பாடிய பாடலாகும்.

சேரமான் வீற்றிருந்து ஆட்சிபுரியும் நாட்டில் புனங்காப்போர் கிளிமுதலிய பறவைகளைக் கடிதற்பொருட்டுத் 'தட்டை' என்னும் கருவியைப் புடைத்து ஒலிப்பார்களாயின் அதன் கடிய ஓசைக்கு அஞ்சி அதற்கு அயலேயமைந்த நெற்கதிர் முற்றிய வயல்களிலும் அதனையடுத்த மிக்க நீரையுடைய கடற்கரைப்பகுதிகளிலும் வாழும் பறவைகள் ஒருசேர எழுகின்றன. இவ்வாறு குறிஞ்சியும் மருதமும் நெய்தலும் விரவிய நாட்டிற்கு உரிமையுடையவனாகச் சேரமான் கோக்கோதை மார்பன்

விளங்குதலால் அவ்வேந்தனை 'நாடன்' என்னும் குறிஞ்சி நிலப்பெயரால் அழைப்பேனோ? 'ஊரன்' என்னும் மருத நிலப்பெயரால் அழைப்பேனோ? 'சேர்ப்பன்' என்னும் நெய்தல் நிலப்பெயரால் அழைப்பேனோ? எவ்வாறு சொல்லுவேன்'' என்பது இப்பாடலின் பொருளாகும். இதனைக்கூர்ந்து நோக்குங்கால் சேர்ப்பன், ஊரன், நாடன் முதலியன ஆசிரியர் தொல்காப்பியர் குறித்த திணைதொறு மரீஇய நிலப்பெயராகிய பெயர்ப்பெயர் என்பது நன்கு விளங்கும்.

சிவபெருமான் வேடுவனாகி வேண்டுருக் கொண்டு காடது தன்னிற் கரந்த நிலையில் அவன் மேற்கொண்ட வேட்டைத் தொழில் பற்றிக்'காட்டகத்து வேடன்' என்றும், 'ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன் விசிறும் பேராசை வாரியனாய்த்' திருவிளையாடல் புரிந்தமை பற்றிக் 'கடலில் வலைவாணன்' என்றும் திருவாதவூரடிகள் திருவாசகம்—பண்டாய நான்மறை ௩-ஆம் திருப்பாடலிற்குறித்துள்ளார். இக்குறிப்பினை நோக்குமிடத்து 'வேடன்', 'வலையன்' என்ற பெயர்கள் முதலில் தொழில் பற்றிய பெயர்களாக வழங்கி, மிகமிகப் பிற்காலத்தில்தான் அவை ஒவ்வொரு தொகுதியினரைக் குறித்த இனப்பெயராகவும் மாறின என்ற உண்மை இனிது புலனாதல் காணலாம்.

அகத்திணை யொழுகலாற்றில் வேந்தர்க்கும் வேந்தரொடு சிவணிய சிறப்பின் ஏனோர்க்கும் உரியவாகச் சொல்லப்பட்ட பிரிவுகளிற்சில நானிலமக்களுக்கும் உரிய என்று உணர்த்துவது,

'மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே' (29)

எனவரும் அகத்திணையியற் சூத்திரமாகும்,

இச்சூத்திரத்தில், மேலோர் என்பதற்குத் 'தேவர்' என இளம்பூரணரும். 'வணிகர்' என நச்சினார்க்கினியரும் மாறு

பட்டப்பொருள் வரைந்தனர். மக்களது ஒழுகலாற்றைப் பற்றிய பிரிவு வகை விளக்கும் இவ்விடத்தில் தேவரைப்பற்றிய குறிப்பு வேண்டப்படாமையானும், ஆரியர் கூறும் நான்கு வருணத்தாருள் மூன்றுமவராக எண்ணப்படும் வணிகரை மேலோர் எனக்குறித்தல் அவர் கொண்ட வருணநிலைக்கு ஒவ்வாமையானும் ஈண்டு 'மேலோர்' என்று குறிக்கப் பெற்றவர் 'ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன' (29) என்புழிப்போல வேந்தரும் வேந்தரொடு சிவணிய ஏனேருமே யாவர் என்பது பாரதியாரவர்கள் துணிபு.

இனி, இச்சூத்திரத்தில் 'நால்வர்' என்றது நான்கு வருணத்தாரை என இளம்பூரணரும், அந்தணர், அரசர், உழுதுண்போர் உழுவித்துண்போர் என்னும் இருவகை வேளாளர் ஆக நால்வரையும் என நச்சினார்க்கினியரும் வேறுபட உரை கூறியுள்ளனர், அன்னேர் குறித்த நால் வகை வருணத்துள் அரசரும் வணிகரும் அடங்குவராதலின் அங்ஙனம் நால்வருள் அடங்கிய ஒரு திறத்தாரை விலக்கி ஏனையோரை 'நால்வர்' என எண்ணியற் பெயரால் தொகுத் துரைத்தல் இயலாது எனவும் மக்களை நிலத்தாலன்றி நிறத்தாற் பகுத்துரைக்கும் சாதிவேறுபாடு தொல்காப்பியர் காலத் தமிழகத்தில் என்றும் நிலவியதில்லை யெனவும் உணர்ந்த பாரதியாரவர்கள், மேலோர் முறைமை நால்வருக் கும் உரித்தே' எனவரும் அகத்திணையியற் சூத்திரத்திற்கு, "மேலே வேந்தனென்றும், வேந்தரொடு சிவணிய சிறப்பின் ஏனேரென்று குறிக்கப்பட்ட மேலோர்களுடைய பிரிவு பற்றிய மரபெல்லாம் தமிழகத்தில் நானில மக்களுக்கும் ஒப்பவுரியன" என நேரியமுறையில் ஆசிரியர்கருத்துணர்ந்து உண்மைப்பொருள் கூறியுள்ளார்கள். இவர்கள் கூறிய வண் ணம் தொல்காப்பியனாரால் 'நால்வர்' எனக் குறிக்கப்பெற்ற வர்கள் ஆரியர் விதிப்படி கூறும் நான்கு வருணத்தாரல்லர். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனும் நான்கு நிலங்களில் வாழும் நிலமக்களே என்பது.

''பரத்தை வாயில் நால்வருக்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்' (30)

எனவரும் பொருளியற் சூத்திரத்தில் 'நிலத்திரிபின்று' எனத் தொல்காப்பியர் சுட்டிய சொற்குறிப்பாலும், அவ்வாசிரியர் 'நால்வர்' எனச்சுட்டிய தொகையினை விளக்கும் நிலையில்,

'குடிகெழீஇய நானிலவரோடு
தோன்று மொழிந்து தொழில்கேட்ப'
(மதுரைக்-123, 124)

எனவரும் மாங்குடி மருதனார் வாய்மொழியாலும் நன்கு விளங்கும். மேற்காட்டிய சான்றுகளால் இங்கு 'நால்வர்' என்ற சொல், நானிலமக்களைக் குறித்து வழங்கிய தென்பதும் தமிழ்நாட்டிற் பிற்காலத்திற் புகுந்த நால்வகை வருணப் பிரிவைக் குறிப்பதன்றென்பதும் நன்கு துணியப்பெற்றமை காணலாம். இவ்வாறு தொல்காப்பியத்தின் உண்மைப் பொருள் கண்டுமகிழ்தற்கு வழிகாட்டியாக நாவலர் பாரதியாரவர்கள் தம் நுண்மாண் நுழைபுலத்தினால் ஆராய்ந்து இயற்றிய தொல்காப்பியர்-பொருட்படலம் அகத் திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் என்பவற் றின் புதிய உரைப்பகுதிகளில் அமைந்த அரிய உண்மைகள் பலவாகும். அவற்றைத் தமிழறிஞரும் தமிழ் மாணக்கர் களும் போற்றிப் பயின்று பயன் கொள்ளுதல் இன்றியமை யாதது என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

காய்தலுவத்தலகற்றியாராயும் நல்வழி வகுத்த நாவலர் சோமசுந்தரபாரதியாரவர்களை நினைந்து போற்றுமுகமாக அவர் மேற்கொண்ட தமிழ்ப்பணியினைத் தொடர்ந்து செய் தல் தமிழாராய்ச்சியாளரது தலையாய கடமையாகும்.

ஙப்போல் வளை

[மா. இளையபெருமாள், எம். ஏ. எம். லிட்]

தமிழ்ப்பாக்களில் மெல்லோசையினால் ஏற்படும் இன்பத்தை மெல்லிசை வண்ணம் என்று கூறுவர் தொல்காப்பியர். அவ்வின்பத்திற்குக் காரணமாக விளங்கும் மெல்லின மெய்களில் முதன்மையான ஙகரத்தைப்பற்றி எண்ணும் பொழுது ஙப்போல் வளை என்று நாம் இளமையில் கற்ற ஔவைக் கிழவியின் ஆத்திசூடி நம் நினைவுக்கு வராமல் இருக்க முடியாது. எளிய சொற்றொடரில் அமைந்துள்ள இம் முதுமொழியில் அடங்கியிருக்கும் அரிய பொருளை எண்ணி வியக்கும் போது, அதனை இளம் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல் பதியச் செய்யும் ஆரம்ப ஆசிரியர்களையும் நன்றியுணர்வோடு நினைக்காமலிருக்க முடியாது.

“ஙா, ஙி, ஙீ, ஙு, முதலிய உயிர்மெய்களைத் தமிழ்ச் சொற்களில் நாம் காணமுடிவதில்லை. அதன்காரணமாக அவை தமிழ் நெடுங்கணக்கினுள் நீக்கப்படுவதில்லை. அதற்குக் காரணமாக அமைவது ங் என்ற மெய்யெழுத்தின் இன்றியமையாமையாகும். அதனைப்போல உனது இன்றியமையாத நிலைமையால் உனது சுற்றத்தையும் மற்றவர்கள் பொருளாகக் கருதுமாறு வாழ்விக்க வேண்டும்” என்று எனக்கு எழுத்தறிவித்த ஆசிரியர்கள் அதற்கு உரைத்த பொருள் என் நினைவிலிருந்து அகலவில்லை.

ஙகர ஒற்றொலியையும், குறுணி என்ற அளவையும் குறிக்கின்ற ங, ஙகரம் என்பவற்றிலும் இடம், தன்மை

ஆகிய பொருளைக் குறிக்கின்ற ஙனம் என்ற நொண்டிச் சொல்லிலும் காணப்படும் ஙகர உயிர் மெய்யைத்தவிர ங் வேறு உயிர்களோடு சேர்ந்து தமிழ்ச் சொற்களில் பயன் படுவதில்லை. அதன் காரணமாக அம்மெல்லொலியின் இன்றியமையாமை குறைந்து விடவில்லை. நுணங்கு, அலங்கு, இலங்கு, திரங்கு, குறங்கு, உயங்கு, பாங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, நுடங்கு முதலய இலக்கியச் சொற்களில் மட்டுமல்ல, அடங்கு, சடங்கு, மடங்கு, சங்கு, நுங்கு, பங்கு, மங்கு, முங்கு, மலங்கு, அரங்கு, குரங்கு, இரங்கு, சிரங்கு, தயங்கு, துலங்கு, இறங்கு, உறங்கு, ஏங்கு, ஓங்கு, தூங்கு, நீங்கு, கறங்கு, தாங்கு, தேங்கு முதலியன போன்று சாதாரணத் தமிழ்மக்கள் தங்கள் அன்ருடவாழ்வில் பல்லாயிரந் தடவைகள் தங்கள் செயல்களையும் பிறபொருள்களையும் உணர்த்தற்கு வழங்கும் எளிய சொற்களிலும் காணப்படும் ஙகர ஒற்ருெலி எவ்வளவு அதிகமாகப் பயன்படும் மெல்லோசை என்பது புலப்படுகிறது. ஆகவே நமது இலக்கணங்களிலெல்லாம் ங் ஒரு தனி மெய்யெழுத்தாகக் கணிக்கப் படுவதுடன் மெல்லின மெய்களில் முதலில் வைத்தும் எண்ணப் படுவதைக் காண்கிருேம்.

யாங்ஙனம் என்ற சொல்லை 'யாம் கனம்' என்று காட்டி ஙகர ஒற்றின் மெல்லிய தன்மையை மகரத்தின் வேற்றிட ஒலியாகவும் அதன் வல்லிய தன்மையைக் (?) ககரத்தின் வேற்றிட ஒலியாகவும் கொள்வதோடு பொதுவாக ககரத்தோடு இணைந்து ங்க் என்று வரும் ஙகர ஒலி எல்லாவற்றையும் மகரத்தின் வேற்றிட ஒலியாகவும் கொள்கின்றனர், சில நூதன இலக்கணக் காரர்கள். இருமொழிப் புணர்ச்சிகளில் சிறுபான்மை ககரத்தின் முன்மகரம் ஙகரமாகத் திரிவதைக் கொண்டு ஙகரத்தை மகரத்தின் வேற்றிட ஒலியாக அடக்குவதானுல், அவ்வாறே ச,த ஆகியவற்றின் முன்

மகரத்தின் திரிபாகிய ஞ,ந ஆகியவற்றையும் மகரத்தின் வேற்றிட ஒலிகளாகக் கொள்ள வேண்டும். தவிர இணைந்து தோன்றும் ங்க ஒலியிலெல்லாம் ஙகரத்தை மகரத்தின் வேற்றிட ஒலியாகக் கொள்வது, சொற்களில் இயல்பாக நிற்கும் ஙகர ஒற்றொலியின் இன்றியமையாமையைப் புறக் கணிப்பதாகும். அதன் விளைவாக 'யாம்கனம்' மட்டுமல்ல, 'தம்கி' 'சம்கு,' 'பம்கு' 'சம்கடம்' முதலிய விநோத ஒலி முறைகளைத் தமிழில் ஏற்படுத்துவதாகும். இருமொழிப் புணர்ச்சியில் திரிந்து நிற்கும் ஙகரத்தை 'ம்'என்று உச் சரித்து மொழிகளைப் பிரித்துப் படிப்பதுபோல இயல்பாக நிற்கும் ஙகர ஒற்றொலியை மகரமாக ஒலித்தல் வழக்கத்தில் இல்லாதது மட்டுமல்ல, நகைப்புக்கிடமான தொன்றாகும்.

இருமொழிப் புணர்ச்சியிலும், மகர ஈற்று மொழிகளும் மகர ஈறில்லாத மொழிகளும் ககரஒற்றை முதலில் உடைய வருமொழிகளோடு புணரும் போது இனஎழுத்தாகிய ங் பெறுதலும் முக்கியமான தொன்றாகும். உதாரணமாக மாங்காய் என்பதில் ஆகார ஈற்று மொழியும் காய் என்ற வருமொழியும் ககரத்தின் இன வொற்றுமிக்குப் புணர்ந் துள்ளன. இங்கெல்லாம் ஙகரத்தை மகரத்தின் வேற்றிட ஒலியாகக் கூறுதல் தமிழ்மொழிப் புணர்ச்சி முறைகளோடு மாறுபடுகின்றது.

அன்றியும் ஒரேசொல் மகரம் திரிந்த ஙகரத்தின் ஒலி யால் ஒரு பொருளையும், இயல்பாகிய ஙகர ஒலியால் மற் றொரு பொருளையும் பயப்பதைக் காண்கிறோம். உதாரண மாகத் 'தங்காது' என்ற சொல்லின் ஙகரத்தை மகரந்திரிந்த ஙகரம் எனக் கொண்டால் தம்முடைய காது என்னும் பொருளையும், இயல்பாகிய ஙகரம் எனக்கொண்டால்

'தங்காமல்' என்னும் பொருளையும் தருகின்றது. பின்னைய பொருள் பயப்பதைத்'தம்காது'என ஒலிப்பது தமிழ் மரபும் அன்று.

ஆகவே தமிழ்ச் சொற்களில் இயற்கையான அங்கமாக நிற்கும் நகரத்தைத் திரிந்த நகரத்தினுள் அடக்கி மகர மாகக் காட்டி எண்ணிக்கையைக் குறைக்க முற்படுவது தமிழ் ஒலிமுறைக்கு மாறுபடுவதோடு தமிழன்னையின் ஒரு றுப்பைக் குறைக்க முயல்வது போலாகும்.

நீக்கமுடியாத ஆற்றல் படைத்த நகர மெய்யையும் அது நின்று நிலவும் பழகு தமிழ்ச் சொற்களையும் எண்ணி வியக்கும் போது 'நப்போல் வளை' என்ற கருத்து நிறைந்த முதுமொழி தந்த செஞ்சொற் கிழவியும் அவளது அமுத மொழிகளைப் பிஞ்சு உள்ளங்களில் பதியவைக்கும் எழுத்தறி விக்கும் இறைவர்களும் பாராட்டப்பட வேண்டிய வர்களல்லவா?

மாணவர் பகுதி

வள்ளுவர் சொற்படி வாழ்*

1 உள்ளுணர்வைத் தொட்டே உயிர்க்குறுதி தோற்றுவித்து
நள்ளிருளை நீக்குமொளிஞாயிறதாய்— உள்ளவிந்து
வெள்ளியராய் வாழுங்கீழ் வீணரைக் கண்டுநகும்
வள்ளுவர் சொற்படி வாழ்.

கா. தெய்வேந்திரன்
முடிவுநிலை 2 ஆம் யாண்டு

2 தொல்லை வினையென்று சோம்பிக் கிடவாது
வல்லவனாய் வாழு முயிர்க்கெல்லாம்—நல்லவனாய்
உள்ளுமா றுய்ய வுறுதிப் பொருளுரைக்கும்
வள்ளுவர் சொற்படி வாழ்.

து. பொன்னுசாமி
முடிவுநிலை 2 ஆம் யாண்டு

3 பண்புமிகு நல்லறத்தைப் பார்பெறவே பாவலராய்த்
திண்மைமிகு உள்ளமொடு செந்தமிழின்—பண்ணமைய
பள்ளத்தில் வெள்ளமெனப் பாய்ந்தே வுணர்வெழுப்பும்
வள்ளுவர் சொற்படி வாழ்.

நீ. சுந்தரராமன்
முடிவுநிலை 2ஆம் யாண்டு

4 கற்றோன்றாக் காலத்தே கற்றறிந்த மூதறிஞர்
சொற்றபெருஞ் செந்நா மறையெனவே—நற்றவத்தோர்
தெள்ளமுதாய் மெய்யன்பர் துய்க்கின்ற முப்பாலாம்
வள்ளுவர் சொற்படி வாழ்.

சா. ஆதினமிளகி
முடிவுநிலை 2ஆம் யாண்டு

---

* இவ்வடியை ஈற்றிலே வைத்து மதுரைச் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களால் எழுதப்பட்டுள்ள வெண்பாக்கள்.

5 மன்னுந் தமிழகத்தில் மாண்புட னேவாழ்ந்து
தென்னு தமிழ்க்கலையைத் தேர்ந்தேநீ—வள்ளியனுய்க்
கள்ளமிலா வாய்மையினுற் கட்டுரைத்த பாவலராம்
வள்ளுவர் சொற்படி வாழ்.

இரா. சரோஜா
முடிவுநிலை 2-ஆம் யாண்டு

6 உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனலென்றே—ஒள்ளறிவால்
துள்ளுதமிழ் சூழ்புவியில் தோன்ற வுரைத்திட்ட
வள்ளுவர் சொற்படி வாழ்.

கா. இராமச்சந்திரன்
முடிவுநிலை 2-ஆம் யாண்டு

7 எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கென்றே—திண்ணமுடன்
கள்ளமிலா வுள்ளத்தால் காணரிய காலமெலாம்
வள்ளுவர் சொற்படி வாழ்.

மு. பிச்சாண்டி
முடிவுநிலை 2-ஆம் யாண்டு

8 சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவென்றே வென்றியுறத்
தெள்ளிதின் கூறிய செஞ்சொற் கவிஞராம்
வள்ளுவர் சொற்படி வாழ்!

மெ. அந்தோனிசாமி
முடிவுநிலை 2-ஆம் யாண்டு

9 வெள்ளமெனப் பொங்கியெழும் வீறுகொண்ட பொன்னுரையைத்
தள்ளாத போழ்தும் தளர்வகற்றும் வாயுரையைத்
தெள்ளுதமி ழாலே தெளிவாய்த் தெளிவித்த
வள்ளுவர் சொற்படி வாழ்

பெ. வே. இராமச்சந்திரன்
முடிவுநிலை முதலாண்டு

10 மறவாமற் கூவி யுறவுடனே யுண்ணும்
சிறுகருங் காக்கைச் செயலை-அறம்பேசும்
தெள்ளறிவு மானிடனே! சிந்தையிற் கொண்டொழுகி
வள்ளுவர் சொற்படி வாழ்

கு. சீனிவாசன்
முடிவுநிலை முதலாண்டு

11 ஈசலெனத் தோன்றி இசையிலா திற்றழியும்
பாசிபோன்றார் வாழ்ந்து பலனென்னை? -காசினியில்
உள்ளற் கரிய உயர்பெரும் நூலதாம்
வள்ளுவர் சொற்படி வாழ்

பழனிசிங்காரவேலு
முடிவுநிலை முதலாண்டு

12 தென்றலென வீசும்நற் றென்றமிழின் பாவதனில்
அன்றலரும் பூவெனவே ஆய்ந்திட்டு –நின்றுலகில்
வள்ளலார் வான்புகழார் வாழ்வாங்கு வாழநனி
வள்ளுவர் சொற்படி வாழ்

பெ. இராமசாமி
முடிவுநிலை முதலாண்டு

13 இல்லாத சாதிகளை இந்நிலத்தில் தோற்றுவித்த
பொல்லா மனுநெறியைப் போற்றாது—நல்லறிவில்
உள்ளந் தெளிந்தோங்கி யுய்ந்து திகழ்ந்திடவே
வள்ளுவர் சொற்படி வாழ்

பொ. செ. செண்பகம்
முதனிலை இரண்டாம்யாண்டு

14 தையலர்க்கு மாடவர்க்கும் தார்வேந்தர் தங்களுக்கும்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்முறையை-ஐயமறத்
தெள்ளு தமிழ்மொழியில் தேர்ந்தே யளித்திட்ட
வள்ளுவர் சொற்படி வாழ்.

சி. பழனியப்பன்
முதனிலை இரண்டாம்யாண்டு

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	3	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0
72.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒரு முறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரு. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 சிங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரு. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு . வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.